2014

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT

## ඉඩම් හා ඉඩම් සංවර්ධන අමාත්‍යාංශය
## காணி ,காணி அபிவிருத்தி அமைச்சு
## *Ministry of Land and Land Development*




*“මිහිකත මැඳුර”*
ඉඩම් මහ ලේකම් කාර්යාලය
*1200/6, රජමල්වත්ත පාර*
බත්තරමුල්ල

“மிஹிகத்த மெதுர,
காணிச் செயலகம்
1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை

" Mihikatha Medura"
Land Secretariat Office
1200/6, Rajamalwatta Rd
.Battaramulla

## உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | | **அறிமுகம்** ................................................................. | 2-4 |
| | 1.1 | நோக்கு ................................................................................ | 5 |
| | 1.2 | செயற்பணி ........................................................................ | 5 |
| | 1.3 | நோக்கங்கள் ...................................................................... | 6 |
| | 1.4 | அமைச்சின் பிரதான விடயப்பரப்புகள் ............................... | 6 |
| 2. | | **பணியாட் தொகுதி தாபனக் கட்டமைப்பு** .......... | 7 |
| 3. | | **மனித வள முகாமைத்துவம்** | |
| | 3.1 | பணியாட் தொகுதி கட்டமைப்பு ................................................ | 8-9 |
| | 3.2 | இடமாற்றங்கள் தொடர்பான விபரங்கள் ............................. | 10 |
| | 3.3 | தாபன நடவடிக்கைகள் .................................................. | 11 |
| | 3.4 | மனித வள அபிவிருத்தி | |
| | 3.4.1 | உள்நாட்டுப் பயிற்சிப் பாடநெறி ............................. | 12-13 |
| | 3.4.2 | வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள் ................. | 14 |
| 4. | | **நிதி முகாமைத்துவம்** | |
| | 4.1 | செலவு மதிப்பீடு ............................................................... | 15 |
| | 4.2 | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண 'பி' கணக்கு .... | 16 |
| | 4.3 | வருமானக் கணக்கு ............................................................ | 16 |
| | 4.4 | பௌதீக வள முகாமைத்துவம் | |
| | 4.4.1 | அசையா சொத்துக்கள் .................................................... | 16 |
| | 4.4.2 | அசையும் சொத்துக்கள் .................................................. | 17-19 |
| 5. | | **அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அமைச்சின் கீழுள்ள பிரிவுகளின் பங்களிப்பு** | |
| | 5.1 | காணி அபிவிருத்திப் பிரிவு .............................................................. | 20-21 |
| | 5.2 | காணிக் கொள்கைப் பிரிவு ................................................................ | 22 |
| | 5.3 | காணி எடுத்தற் பிரிவு .......................................................................... | 23-25 |
| | 5.4 | நிலச்சக்திப் பிரிவு .................................................................................. | 26-29 |
| | 5.5 | நிருவாகப் பிரிவு ..................................................................................... | 30 |
| | 5.6 | திட்டமிடல் பிரிவு .................................................................................. | 30 |
| | 5.7 | சட்டப் பிரிவு ............................................................................................ | 31 |
| | 5.8 | நிதிப் பிரிவு ................................................................................................ | 31 |
| | 5.9 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ...................................................... | 31 |

## 1. அறிமுகம்

ஒரு நாட்டின் இயற்கை வளங்களுள் முக்கிய இடம் வகிப்பது நில வளமாகும். சம்பிரதாய பொருளியல் விஞ்ஞானத்தில் நிலம், உழைப்பு, மூலதனம் முயற்சியாண்மை எனும் உற்பத்தித் தொழிற்பாட்டில் காணப்படுகின்ற 04 காரணிகளுள் முதலிடம் வகிப்பது பூமியாகும். இவ்வாறு நிலம் உற்பத்தித் தொழிற்பாட்டில் பிரதான ஊடகமாக விளங்குவதுடன், பிற உற்பத்திக் காரணிகளின் அடிப்படையாகவும் விளங்குகின்றது. எந்தவொரு நாட்டிலும் காணப்படுகின்ற அனைத்து இயற்கை வளங்களும் பூமியை அடிப்படையாகக் கொண்டே அமையப் பெற்றுள்ளன. உதாரணமாக கனிப்பொருட்கள், நீர், மரஞ்செடி கொடிகள், பிராணிகள் முதலான வளங்கள் ஏதேனுமொரு விதத்தில் நிலத்தின் துணை வளமே.

பூமி எனும் பதம், நிலத்தின் மேற்பரப்பிலுள்ள மண் வளம், பிற பூகோல அமைப்புகள் அதேபோன்று நிலத்துக்கடியிலுள்ள கனிப்பொருட்கள் என்ற பரந்து விரிந்த வளங்களை உள்ளடக்கியதாக அமையப்பெற்ற சொல்லாக விளங்குகின்றது. எனவே, பூமி எனும் பதம் வெறுமனே பூமியின் மீதுள்ள போர்வை அல்லது படலம் அல்லது பூமியின் மீது நீரால் மூடப்படாத பிரதேசம் மட்டுமல்ல என்பது குறிப்பாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆங்கில மொழியில் பூமி, நிலம் ஆகிய இரண்டிற்கும் **LAND** எனும் பதம் பாவிக்கப்பட்டாலும், முழு அல்லது பரந்த அளவில் கலந்துரையாடும் போது ***பூமி*** எனும் பதத்தையும், அதன் வேறாக்கப்பட்ட பகுதியொன்று தொடர்பில் கலந்துரையாடும் போது ***காணி*** எனும் பதத்தையும் பாவிப்பது மிகப் பொருத்தமானதாகும். இங்கு தமிழ் மொழியில் பூமி, காணி எனும் பதங்கள் பயன்படுத்தப்படுவதைப் போன்றே, சிங்கள மொழியில் ***භූමිය, ඉඩම*** என்ற பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

காணி, நெகிழ்வுத் தன்மையற்ற வழங்கலைக் கொண்டதும், பயன்படுத்தப்படாத போது அரிப்பிற்கு உட்படுகின்றதுமான ஓர் இயற்கை வளமாகும். எனவே, ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அத்தியவசியமானதும் பிரதானமானதுமான காரணியாக விளங்குவது சிறந்த நிலப் பயன்பாடும் பாவனையுமாகும். இலங்கை போன்ற விவசாயத்தைப் பிரதான சீவனோபாயமாகக் கொண்ட மக்கள் வாழும் நாடுகளில் நிலத்திற்கு இருப்பது வெறுமனே பொருளாதாரப் பெறுமதி மட்டுமல்ல. அவ்வாறான நாடுகளில் காணியுடன் பின்னிப் பிணைந்த சமூக, கலாச்சார பெறுமதியும் காணப்படுகின்றது. இதன் காரணமாக காணி விடயம் தொடர்பான நடவடிக்கைகள், மக்களின் அன்றான வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த மிகவும் கூருணர்வுடைய கடமையாகவே காணப்படுகின்றது.

பழங்காலம் தொட்டே முழு நிலத்தினதும் உரிமை அரசருக்கே இருந்தது. காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் உரிமையும் அரசனிடத்திலேயே காணப்பட்டது. இங்கு அரசனால் காணிகளை உரித்தாக்கும் விதம் மூன்று முறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவதாக அரசனுக்காக அல்லது அரச குடும்பத்திற்காக பல்வேறு நபர்களினாலும் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள், பணிவிடைகள் சார்பில் நபர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிப்பதாகும். இவை ***நிந்தகம்*** என அழைக்கப்பட்டதுடன், அந்தந்தச் சேவையின் அளவிற்கேற்ப காணியின் அளவு தீர்மானிக்கப்பட்டது. பன்சலை போன்ற பௌத்த வழிபாட்டுத்தளங்களுக்காக காணிகள் வழங்கப்பட்டமை இரண்டாவது

முறையாகுமென்பதுடன், இது ***விகாரகம்*** என அழைக்கப்பட்டது. கோவில்களுக்காக காணிகள் வழங்கப்பட்டமை மூன்றாவது முறையாகுமென்பதுடன், இது ***தேவாலகம்*** என அழைக்கப்பட்டது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் கூட இலங்கையில் காணப்பட்ட சம்பிரதாய காணி முகாமைத்துவ முறைமையில் மாற்றம் ஏற்பாடத போதிலும், பிரித்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் அதுவரை காணப்பட்டு வந்த காணி முகாமைத்துவ முறை முழுமையான மாற்றத்திற்கு உட்பட்டது.

1927, 1955, 1983 ஆகிய வருடங்களில் காணி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ் ஆணைக்குழு அறிக்கைகளை, இந் நாட்டின் காணி நிருவாகத்தில் மட்டுமல்லாது காணிப் பயன்பாடு, உரிமை என்பன தொடர்பில் அக் காலத்தில் காணப்பட்ட பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து, சிபாரிசுகள் முன்வைக்கப்பட்ட பெறுமதி மிக்க ஆவணங்களாகவும் கருத முடியும்.

1840 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அரசாங்கக் காணிகள் (அத்துமீறிக் கைப்பற்றல்) கட்டளைச் சட்டம், 1897 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தரிசு நிலக் கட்டளைச் சட்டம், 1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க காணி நிருணய கட்டளைச் சட்டம், 1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரசாங்கக் காணிகள் (உடைமையை மீளப் பெறல்) சட்டம், 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காணிக் கொடை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் முதலான சட்டங்கள், அரசாங்கக் காணிகளின் அபிவிருத்தி, பேணிப் பாதுகாத்தல், நிருவாகம் முதலான விடயங்களில் முக்கிய திருப்புமுனைகளாகும்.

நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சு மிக முக்கிய சாதகமான தாக்கத்தைச் செலுத்துகின்றது. 1927 அரச பேரவையில் காணி, கமத்தொழில் விடயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளின் படி, 1932 இல் கமத்தொழில், காணி அமைச்சும், 1935 இல் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களமும் நிறுவப்பட்டன.

நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, மட்டுப்படுத்தப்பட்ட நில வளத்தை பயன்படுத்துவதற்கான திறன்முறைகளை வகுக்கும் பணிகள் காணி, காணி அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் பிரதானமாக அரசாங்கக் காணிகளையும், தனியார் காணிகளையும் குறிப்பாக இனங் காணும் பணிகளும், காணிகளின் உரித்தை நிருணயம் செய்யும் பணிகளும் காணி உரித்து நிருணயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், அரசாங்கக் காணிகளை நிருவகிக்கும் பணிகள் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அரசாங்கக் காணிகளுக்கான நில அளவை வரைபடங்களும், நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தனியார் காணிகளுக்கான நில அளவை வரைபடங்களும் நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்படுகின்றது. பிரதேச/ மாவட்ட காணிப் பயன்பாட்டுடன் தொடர்புடைய திட்டங்களை வகுக்கும் பணிகள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகவும் காணிகளின் தகுநிலையைத் தீர்மானிக்கும் பணிகள் காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

நில அளவையாளர்களைப் பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடத்தில் தொழில்சார் நிபுணத்துவத்தைப் பேணிச் செல்லல் முதலான நோக்கங்களைப் பிரதானமாகக் கொண்டு, 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நில அளவைப் பேரவை 2003 இல் நிறுவப்பட்டது. அத்துடன் நில அளவைத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனமான தியத்தலாவையில் அமைந்துள்ள நில அளவை மற்றும் படமாக்கல் நிறுவனம், நில அளவை மற்றும் படமாக்கல் ஆகிய விடயப் பரப்புகள் தொடர்பாக பரிபூரண அறிவையும் அனுபவங்களையும் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

# *காணி, காணி அபிவிருத்தி அமைச்சு*

## 1.1 நோக்கு

நிலைபேறான அபிவிருத்திக்காக சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்ட நில வளம்.

## 1.2 செயற்பணி

சிக்கலற்ற உரித்தையும் உச்ச பயன்பாட்டையும் சகலருக்கும் பெற்றுக் கொடுத்து, அனைத்துத் தரப்பினர்கள் சார்பிலும் கொள்கை வகுத்தல், அமுல் செய்தல், ஒருங்கிணைத்தல் மூலம் நில வளத்தை வினைத்திறன் மிக்கவாறு முகாமை செய்து நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.


## 1.3 நோக்கங்கள்

1. தேசிய காணிக் கொள்கையை இற்றைப்படுத்துதலும் அமுல் செய்தலும்.
2. எதிர்கால சந்ததியினருக்காக பௌதீகச் சூழலை பேணிப் பாதுகாத்தல்.
3. அரசாங்கக் காணிகள் பேணிப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல்.
4. காணிப் பயன்பாட்டு கொள்கையை அமுல் செய்தல்.
5. அரசாங்கக் காணிகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும், அரிப்புக்கு உட்படுவதையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
6. அரசாங்கக் காணிகளை சிறந்த முறையில் முகாமை செய்தலும் உகந்த காணிகளை, காணிகள் இல்லாத மக்களிடையே பகிர்ந்தளித்தலும், அபிவிருத்தி செய்தலும்
7. அபிவிருத்தித் திட்டங்களுக்காவும் மற்றும் அத்தியாவசியமான தேவைகளுக்கும் காணிகளை பெற்றுக் கொடுத்தல்
8. நாட்டிலுள்ள அனைத்துக் காணிகளினதும் உரித்தை உறுதி செய்து உரித்துப் பதிவினை மேற்கொள்ளல்

## 1.4 அமைச்சின் பிரதான விடயப் பரப்புகள்

1. காலத்தின் தேவைக்குப் பொருத்தமானவாறு காணிக் கொள்கைகளை வகுத்தலும், அமுல் செய்தலும்.
2. அபிவிருத்திப் பணிகளுக்காக தனியார் காணிகளை எடுத்துக் கொள்ள நேரிடும் போது அவற்றை எடுத்துக் கொள்ளல்.
3. காணியின் உரிமையைப் பாதுகாத்த வண்ணம் சிக்கலற்ற உரித்தை உறுதிப்படுத்தல்.
4. அரசாங்கக் காணிகளை முகாமை செய்தல்.
5. காணி அளத்தல், நில அளவை வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் காணி தொடர்பான தகவல் சேவைகள்.
6. நிலைபேறான அபிவிருத்தியின் பொருட்டு காணி உபயோகத் திட்டங்களை வகுத்தலும், அவற்றை அமுல் செய்தலும்.
7. காணிகள் தொடர்பிலான தேசிய தரவு/ தகவல் முறைமையை நிறுவுதல்.
8. காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் வளங்கள் தொடர்பில் நல்லாட்சியைப் பேணுதல்.

# 2. காணி, காணி அபிவிருத்தி அமைச்சு



# 3. மனித வள முகாமைத்துவம்

## 3.1 பணியாட் தொகுதி கட்டமைப்பு

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை 2014 | முந்திய வருடத்தில் எண்ணிக்கை 2013 | வருடத்தில் மாற்றங்கள் - 2014 | | | | | | நடப்பாண்டில் இருந்த எண்ணிக்கை 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஓய்வு பெறல் | வருடத்தில் இடமாற்றங்கள் | | ஆட்சேர்ப்பு | பதவி உயர்வு | பதவி விலகல் | |
| | | | | | சென்ற | வந்த | | | | |
| 1 | செயலாளர் | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 2 | மேலதிக செயலாளர் - நிருவாகமும் நிதியும்<br>இல. நி.சே. விசேட வகுப்பு | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 3 | மேலதிக செயலாளர் - காணி<br>இல. நி.சே. விசேட வகுப்பு | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 4 | மேலதிக செயலாளர் - நிலச்சக்தி<br>இல. நி.சே. விசேட வகுப்பு | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 5 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் - நிருவாகம்<br>இல. நி.சே. வகுப்பு I | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 6 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் - காணி<br>இல. நி.சே. வகுப்பு I | 01 | - | - | - | 01 | - | - | - | 01 |
| 7 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் - நிலச்சக்தி<br>இல. நி.சே. வகுப்பு I | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 8 | பிரதம கணக்காளர்<br>இ.க.சே. I | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 9 | பணிப்பாளர் (காணி எடுத்தல்)<br>இ.நி.சே. I | 01 | 01 | 01 | - | 01 | - | - | - | 01 |
| 10 | பணிப்பாளர் (காணிக் கொள்கை)<br>இல. நி.சே. வகுப்பு I | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 11 | பிரதம உள்ளக கணக்காய்வாளர்<br>இ.க.சே. I | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 12 | பணிப்பாளர் (நுண்ணாய்வு)<br>இ.நி.சே. I | 01 | - | - | - | - | - | - | - | - |
| 13 | கணக்காளர்<br>இ.க.சே. II/I, II/II | 02 | 01 | - | 01 | - | - | - | - | - |
| 14 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)<br>இ.தி.சே. II/III | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 15 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (காணி)<br>இ.நி.சே. II/III | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 16 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (காணிக் கொள்கை)<br>இ.நி.சே. II/III | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 17 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (காணி எடுத்தல்)<br>இ.நி.சே. II/III | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 18 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (காணி எடுத்தல் - NIRP)<br>இ.நி.சே. II/III | 01 | - | - | - | 01 | - | - | - | 01 |
| 19 | உதவிச் செயலாளர் (நிருவாகம்)<br>இ.நி.சே. III | 01 | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 20 | உதவிச் செயலாளர் (கொள்முதல்/நிருவாகம்)<br>இ.நி.சே. III | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 21 | உதவிச் செயலாளர் (நிலச்சக்தி)<br>இ.நி.சே. III | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 22 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 23 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை 2014 | முந்திய வருடத்தில் எண்ணிக்கை 2013 | வருடத்தில் மாற்றங்கள் - 2014 | | | | | | நடப்பாண்டில் இருந்த எண்ணிக்கை 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வருடத்தில் இடமாற்றங்கள் | | | | | |
| | | | | ஓய்வு பெறல் | சென்ற | வந்த | ஆட்சேர்ப்பு | பதவி உயர்வு | பதவி விலகல் | |
| 24 | மொழி பெயர்ப்பாளர் | 02 | 02 | - | - | - | - | - | - | 02 |
| 25 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 02 | - | - | - | - | - | - | - | - |
| 26 | நுண்ணாய்வு உதவியாளர் (காணி எடுத்தல்) | 111 | 111 | - | 02 | 02 | - | - | - | 111 |
| 27 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 249 | 229 | - | 02 | 02 | 20 | - | - | 249 |
| 28 | நுண்ணாய்வு உதவியாளர் | 03 | 03 | - | 02 | - | - | - | - | 01 |
| 29 | முன்னேற்ற மீளாய்வு உதவியாளர் | 02 | 02 | - | - | - | - | - | - | 02 |
| 30 | ஊடக உதவியாளர் | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 31 | சட்ட உதவியாளர் | 03 | 03 | - | - | - | - | 02 | - | 01 |
| 32 | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 01 | - | - | - | - | - | - | - | - |
| 33 | வழங்கல் உதவியாளர் | 01 | - | - | - | - | - | - | - | - |
| 34 | அபிவிருத்தி உதவியாளர் | 02 | 02 | - | 01 | - | - | - | - | 01 |
| 35 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 06 | 04 | - | - | 01 | - | - | - | 05 |
| 36 | திட்டமிடல் உதவியாளர் | 02 | 02 | - | - | - | - | - | - | 02 |
| 37 | முகாமைத்துவ உதவியாளர் - I, II, III | 55 | 35 | - | 10 | 11 | - | - | - | 36 |
| 38 | கணினி தரவுப் பதிவு இயக்குனர் | 01 | - | - | - | - | - | - | - | - |
| 39 | முறைமை பகுப்பாய்வாளர் | 01 | - | - | - | - | - | - | - | 01 |
| 40 | வீடியோ படப்பிடிப்பாளர் | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 41 | படப்பிடிப்பாளர் | 01 | - | - | - | - | - | - | - | - |
| 42 | உதவிப் படப்பிடிப்பாளர் | 01 | 01 | - | - | - | - | - | - | 01 |
| 43 | அலுவலகப் பணியாளர் | 25 | 21 | - | 02 | 01 | 06 | - | 01 | 25 |
| 44 | சாரதி | 22 | 19 | - | - | - | 02 | - | - | 21 |
| 45 | பூந்தோட்டத் தொழிலாளர் | 02 | 02 | - | - | - | - | - | - | 02 |
| | **மொத்தம்** | **518** | **458** | **01** | **20** | **20** | **28** | **02** | **01** | **482** |

## 3.2 இடமாற்றங்கள் தொடர்பான விபரங்கள்

| தொடர் இல. | பெயரும் பதவியும் | இடமாற்றம் பெற்றுச் சென்ற | | இடமாற்றம் பெற்று வந்த | |
|---|---|---|---|---|---|
| | | திகதி | சேவை நிலையம் | திகதி | சேவை நிலையம் |
| 1. | திருமதி பீ.ஆர். நெலும்தெனிய<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | 2014.01.10 | பிரதேச செயலகம், கடுவளை. | - | - |
| 2. | திருமதி ஈ.எம்.ஏ.கே. யட்டியன<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | 2014.01.10 | கல்வி அமைச்சு | - | - |
| 3. | செல்வி சீ.டி.எஸ். ஜீவந்தி<br>அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2014.01.13 | நிதி, திட்டமிடல் அமைச்சு | - | - |
| 4. | திருமதி யூ.டி.என். அபேகுணவர்தன<br>அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2014.01.17 | கல்வி அமைச்சு | - | - |
| 5. | திருமதி கே.கே.எம்.ஜே. ஜயரத்ன<br>அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2014.01.17 | கல்வி அமைச்சு | - | - |
| 6. | திருமதி ஏ.கே. கலுஆரச்சி<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் 3/III | 2014.01.22 | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | - | - |
| 7. | திரு. எஸ்.எஸ். கிங்ஸ்லி<br>அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2014.01.27 | காணி உபயோக, கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் | - | - |
| 8. | திருமதி எச்.ஏ.சீ. நிருக்ஷிகா<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | 2014.02.05 | ஜனாதிபதி செயலகம் | - | - |
| 9. | திருமதி எச்.ரீ. கல்ஹாரி<br>அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2014.03.05 | குருவிட்ட பிரதேச அலுவலகம், காணி உரித்து நிருணயத் திணைக்களம் | - | - |
| 10. | திருமதி பீ.ஜீ.ரீ.பீ. த சில்வா<br>சட்ட உதவியாளர் | 2014.06.02 | அரச வள, தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு. | - | - |
| 11. | திருமதி பிரியந்தி ஜயந்தன்<br>நுண்ணாய்வு உதவியாளர் (காணி எடுத்தல்) | 2014.06.09 | தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு. | - | - |
| 12. | திருமதி நதீஷா ஜயசிங்ஹ<br>சட்ட உதவியாளர் | 2014.12.15 | நெடுஞ்சாலை, துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சின் வர்த்தக கப்பற்றுறைச் செயலகம் | - | - |
| 13. | திரு. எஸ்.ஜே. பண்டார<br>அலுவலகப் பணியாளர் II | 2014.05.08 | நில அளவைத் திணைக்களம் | - | - |
| 14. | திருமதி டப்.எல்.சீ. பிரியந்திகா<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | - | - | 2014.01.01 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் |
| 15. | திருமதி ஆர்.கே.கே.எஸ். மனோஹாரி<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | - | - | 2014.01.06 | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் |
| 16. | திருமதி கே.பீ. குறுப்புஆரச்சி<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | - | - | 2014.01.09 | பிரதேச செயலகம், கடுவளை |
| 17. | திருமதி சீ. ருவன்பதிரண<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | - | - | 2014.01.09 | பிரதேச செயலகம், பஸ்பாகே கோறளை. |
| 18. | திருமதி பீ.ஏ.ஏ.ஜே. ஜயதிலக்க<br>அரச முகாமைத்துவ உதவியாளர் I | - | - | 2014.03.17 | உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு |
| 19. | செல்வி எச்.ஆர். ரணதுங்க<br>அரச முகாமைத்துவ உதவியாளர் III | - | - | 2014.04.24 | மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். |
| 20. | செல்வி ஏ. ஜயசேக்கர<br>அரச முகாமைத்துவ உதவியாளர் II | - | - | 2014.08.06 | நீதி அமைச்சு |
| 21. | திரு. எம்.டப்.ஜே.கே. ஜயதிலக்க<br>அரச முகாமைத்துவ உதவியாளர் III | - | - | 2014.11.20 | பிரதேச செயலகம், வில்கமுவ. |
| 22. | திருமதி டப்.ஏ.எஸ்.எஸ். விக்கிரமாரச்சி<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் 3/III | - | - | 2014.11.27 | கல்வி அமைச்சு.<br>ஹ/ வலஸ்முல்ல மகா வித்தியாலயம். |
| 23. | திரு. ஆர்.எம்.எஸ்.ஜே. ராஜபக்ஷ<br>நுண்ணாய்வு உதவியாளர் | - | - | 2014.03.10 | கலாச்சார, கலை அலுவல்கள் அமைச்சு |
| 24. | செல்வி எச்.பி.ஐ. தர்மரத்ன<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | - | 2014.01.01 | பிரதேச செயலகம், கேகாளை. |
| 25. | செல்வி டப்.ஆர்.ஏ.எம். ரணதுங்க<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | - | - | பிரதேச செயலகம், கேகாளை. |
| 26. | செல்வி யூ.டி.டி. தில்ஹானீ<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | - | - | பிரதேச செயலகம், கடுவளை. |
| 27. | திரு. எச்.ஏ.வீ. லக்ஷ்மன் பீரிஸ்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2014.10.24 | பௌத்த அலுவல்கள் அமைச்சு | - | - |
| 28. | செல்வி எச்.எம்.பீ.எஸ்.என். ரத்நாயக்க<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2014.11.03 | சுகாதார, சுதேச மருத்துவத்துறை அமைச்சு | - | - |

### சேவையிலிருந்து விடுவித்தல்

| | பெயரும் பதவியும் | திகதி | விடுவிக்கப்பட்ட சேவை |
|---|---|---|---|
| 29. | திருமதி கே. திலீபா அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2014.01.02 | மேல் மாகாண ஆசிரியர் சேவை |

### 3.3 தாபன நடவடிக்கைகள்

| தொடர் இல. | விபரம் | முந்திய வருடம் 2013 | | | நடப்பு வருடம் 2014 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கிடைக்கப்பெற்றவை | அங்கீகரிக்கப்பட்டவை | எஞ்சியது | கிடைக்கப்பெற்றவை | அங்கீகரிக்கப்பட்டவை | எஞ்சியது |
| 1 | ஆட்சேர்ப்பு | 231 | 231 | - | 28 | 28 | - |
| 2 | பரீட்சை நடாத்தல் | 01 | 01 | - | - | - | - |
| 3 | நேர்முகப் பரீட்சை நடாத்தல் | - | - | - | - | - | - |
| 4 | சேவை நிரந்தரமாக்கல் | 02 | 02 | - | 07 | 07 | - |
| 5 | பதவி உயர்வு | - | - | - | - | - | - |
| 6 | சம்பள ஏற்றம் | 173 | 173 | - | 156 | 156 | - |
| 7 | சேவை நீடிப்பு | - | - | - | - | - | - |
| 8 | ஆட்சேர்ப்பு நடைமுறை வகுத்தல் | - | - | - | 01 | 01 | - |
| 9 | சேவையை விட்டுச் செல்லல் | - | - | - | - | - | - |
| 10 | வேலை இடைநிறுத்தம் | - | - | - | - | - | - |
| 11 | மீளச் சேவையில் அமர்த்தல் | - | - | - | - | - | - |
| 12 | ஒழுக்காற்று விசாரணை | - | - | - | 01 | 01 | - |
| 13 | வெளிநாட்டு விடுமுறை அங்கீகரித்தல் | - | - | - | 03 | 03 | - |
| 14 | வெளிநாட்டுப் புலமைப்பரிசில் | - | - | - | - | - | - |
| 15 | அமைச்சரவைப் பத்திரங்கள் | 20 | 11 | 09 | 13 | 11 | 02 |
| 16 | பிணை ஆரம்பித்தல் | - | - | - | - | - | - |
| 17 | பிணை விடுவித்தல் | - | - | - | 01 | 01 | - |
| 18 | கடன் அங்கீகரித்தல் | | | | | | |
| | ஆதனக் கடன் | 04 | 04 | | 09 | 09 | |
| | வாகனக் கடன் | - | - | - | - | - | - |
| | ஏனையவை | - | - | - | - | - | - |
| | **மொத்தம்** | 431 | 422 | 09 | 219 | 217 | 02 |

## 3.4 மனித வள அபிவிருத்தி

### 3.4.1 உள்நாட்டுப் பயிற்சிப் பாடநெறி

| பயிற்சி நிறுவனம் | பாடநெறி | பங்குபற்றிய உத்தியோகத்தரின் பெயர் | பதவி | காலம் | பாடநெறிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | Diploma in English for Professionals (DEP) | திருமதி திலானி மகேஷிகா | உதவிச் செயலாளர் (காணி) | 01 வருடம் | 40,000/- |
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | Certificate Course in English for Employment Purposes – Batch 06 (CEEP) | திருமதி எச்.ஏ.சீ. நிருக்ஷிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 06 மாதம் | 15,000/- |
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | Diploma in English for Professionals (DEP) | செல்வி ஐ. வீரசிங்ஹ | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (காணி) | 01 வருடம் | 40,000/- |
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | Diploma in English for Professionals (DEP) | திருமதி எல்.டப்.எஸ்.பீ. நவரத்ன | உதவிப் பணிப்பாளர் (காணி எடுத்தல்) | 01 வருடம் | 40,000/- |
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | Workshop on Essence of Public Procurement | திருமதி ஏ.எம்.கே. சமரதிவாக்கர | உதவிப் பணிப்பாளர் (காணிக் கொள்கை) | 03 நாள் | - |
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | Workshop on Essence of Public Procurement | செல்வி எம்.ஏ.எல்.டீ. குமாரி | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 03 நாள் | - |
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | அரச முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் | திருமதி எல்.டப்.எஸ்.பீ. நவரத்ன | உதவிப் பணிப்பாளர் (காணி எடுத்தல்) | 02 வருடம் | 240,000/- |
| இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | ICT for Management Assistant Parallel Grades | திருமதி எம்.கே.பீ. சஞ்சீவனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 08 நாள் | - |
| | | திருமதி கே.வீ. பிரசாதினி பத்மசிறி | அபிவிருத்தி உத்தியோகத்தர் | | |
| தேசிய உழைப்பாளர் கல்வி நிறுவகம் | ஒழுக்காற்று நடவடிக்கை முறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | செல்வி றியாசா எம், நௌபல் | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 03 நாள் | 7,500/- |
| பண்டாரநாயக்க சர்வதேச கற்கை நிலையம் | சர்வதேச உறவுகள் தொடர்பான பட்டப்பின் படிப்புப் பாடநெறி | செல்வி ஏ.டீ.பீ. ஆட்டிகல | உதவிச் செயலாளர் (நிலச்சக்தி) | 01 வருடம் | 44,000/- |
| தேசிய உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சு | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு முன்னோடிகளுக்கான பயிற்சிச் செயலமர்வு | திருமதி எச்.ஜீ. மல்காந்தி ஜயரத்ன | முன்னேற்ற மீளாய்வு உதவியாளர் | 01 நாள் | 9,000/- (3x3,000/-) |
| | | திருமதி டப்.கே.எஸ். பத்மா | அரச முகாமைத்துவ உதவியாளர் | | |
| | | செல்வி ஆர்.வய். யெஷ்மிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | | |
| தேசிய உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சு | பணிக் கற்கை மற்றும் முறைகள் தொடர்பான கற்கைச் செயலமர்வு | செல்வி ருவனி பெரேரா | அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் அரச முகாமைத்துவ உதவியாளர்களும் | 01 நாள் | 15,000/- |
| | | திருமதி பீ. ரமணீ நெலும்தெனிய | | | |
| | | செல்வி ஆர்.வய். யெஷ்மிகா | | | |
| | | திருமதி கே. திலீபா | | | |
| | | திருமதி ஏ.ஏ.ஜ. அத்தபத்து | | | |
| தேசிய உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சு | உற்பத்தித் திறனும் ஐவித எண்ணக்கருக்களும் | ஏ.டீ. இலங்ககோன் | அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் அரச முகாமைத்துவ உதவியாளர்களும் | 01 நாள் | 12,500/- (5x2,500/-) |
| | | ஈ.பீ.பீ. எல்விட்டிகல | | | |
| | | ஏ.எச்.எம்.ஆர். செனவிரத்ன | | | |
| | | ருவினி வீரரத்ன | | | |
| | | என்.எச்.எல். நிரோஷா | | | |
| தேசிய உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சு | பூரண தர முகாமைத்துவச் செயலமர்வு | செல்வி எம்.ஏ.எல்.டீ. குமாரி | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 01 நாள் | 21,000/- |
| | | பிரியதர்ஷனீ ஹெட்டிஆரச்சி | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | | |
| | | ருவினி வீரரத்ன | | | |
| | | அஜந்தா இலங்ககோன் | | | |
| | | எரந்திகா மடஹபொல | | | |
| | | கசுன் தர்ஷன | | | |
| தேசிய உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சு | பசுமை உற்பத்தித் திறன் நிகழ்ச்சித் திட்டம் | ஈ.பீ.பீ. எல்விட்டிகல | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,<br><br>அரச முகாமைத்துவ உதவியாளர்கள்,<br><br>தகவல் தொடர்பாடல், தொழில்நுட்ப உதவியாளர் | 02 நாள் | 24,000/- |
| | | டப்.கே. ஸ்ரீமதீ பத்மா | | | |
| | | எம்.பீ. இந்திராணீ அமரசிங்ஹ | | | |
| | | ஏ.எச்.எம்.ஆர். செனவிரத்ன | | | |
| | | ஏ.டீ.ஜே. கமகே | | | |
| | | கசுன் தர்ஷன | | | |

| பயிற்சி நிறுவனம் | பாடநெறி | பங்குபற்றிய உத்தியோகத்தரின் பெயர் | பதவி | காலம் | பாடநெறிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| தேசிய உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சு | உற்பத்தித் திறன் அளவுகோள், பகுப்பாய்வுச் செயலமர்வு | திருமதி ஆர்.கே.கே.எஸ். மனோஹரினி<br>எம்.ஆர். துசாந்தி தக்ஷிலா ரத்நாயக்க<br>திருமதி சுஜீவா லக்மினி ஹேவாகம<br>ஏ.டீ.ஜே. கமகே<br>டப்.கே. ஸ்ரீமதீ பத்மா<br>திரு. கே.வீ.ஆர். சத்யஜித்<br>கே.பீ. பிரசாதினி மதுரங்க | அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் அரச முகாமைத்துவ உதவியாளர்களும் | 01 நாள் | 21,000/- |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | அரச முகாமைத்துவ முதுமாணிப் பட்டப் பாடநெறி | செல்வி எம்.ஏ.எல்.டீ. குமாரி | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 01 வருடம் | 103,500/- |
| NIBM நிறுவனம் | Workshop on Training Account & Audit Staff | யூ. அபேகுணவர்தன<br>என்.பீ. இந்திராணி அமரசிங்ஹ<br>ஏ.எச். ஷாமிலா<br>ஷிரோமி அபேரத்ன<br>ஏ.எச்.எம்.ஆர். செனவிரத்ன | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச முகாமைத்துவ உதவியாளர்கள், நுண்ணாய்வு உதவியாளர்கள் | 04 நாள் | 60,000/-<br>(5x12,000/-) |
| NIBM நிறுவனம் | Workshop on Advanced Excel for Professionals | திரு. எல். ஆரியரத்ன<br>திருமதி சமுத்ரா அத்துகோறல<br>திருமதி கே.வீ. பிரசாதினி பத்மசிறி | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் | 02 நாள் | 19,500/-<br>(3x6,500/-) |
| NIBM நிறுவனம் | மனித வள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | சீ.டீ. வீரசூரிய | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 வருடம் | 112,000/- |
| நிர்மாணத்துறை பயிற்சி, அபிவிருத்தி நிறுவனம் | Practical Aspects of Bid evaluation –Goods, Works and Service | செல்வி றியாசா எம். நௌபல்<br>செல்வி எம்.ஏ.எல்.டீ. குமாரி | உதவிச் செயலாளர் (நிருவாகம்)<br>உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 01 நாள் | 7,200/-<br>(2x3,600/-) |
| British Council | Genaral English | திருமதி தனூஜா முருகேஷன் | மேலதி செயலாளர் (நிருவாகம்) | 06 மாதம் வீதம் 03 பாடநெறிகள் | 34,400/-<br>34,400/-<br>35,500/- |
| டெல்மேஜ் கல்வி நிறுவகம் | ஆங்கில பேச்சுப் பயிற்சிப் பாடநெறி | அமைச்சின் 35 உத்தியோகத்தர்கள் | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் | 03 மாதம் | 83,160/- |
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | உற்பத்தித் திறன் வட்ட அங்கத்தவர்கள் | - | 02 நாள் | 20,000/- |
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | வீதி விபத்துகள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பில் தெளிவூட்டல் | அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும் சாரதிகள் | சாரதிகள் | 01 நாள் | 20,000/- |
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | அலுவலக முறைமை தொடர்பான செயலமர்வு | அமைச்சு உத்தியோகத்தர்கள் அனைவரும் | - | 01 நாள் | 15,000/- |
| DLC கற்கை நிலையம் | Learning the Art of Presenting Using MS PowerPoint -2010 | செல்வி எம்.ஏ.எல்.டீ. குமாரி<br>திருமதி ஏ.எம்.கே.கே. சமரதிவாகர<br>திருமதி திலானி மகேஷிகா | உதவிச் செயலாளர் (நிருவாகம்)<br>உதவிப் பணிப்பாளர் (காணிக் கொள்ளை)<br>உதவிச் செயலாளர் (காணி) | 03 நாள் | 36,000/-<br>(3x12,000/-) |

### 3.4.2 வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள் - 2014

| பாடநெறி | பங்குபற்றிய உத்தியோகத்தரின் பெயர் | பதவி | இடம் | காலம் |
|---|---|---|---|---|
| Smart Geospatial Expo 2014 3rd Geospatial High Level Forum | திருமதி தனுஜா முருகேஷன் | மேலதிக செயலாளர் (நிருவாகம்) | கொரியா | 2014.08.25 - 2014.08.28 |
| SARRC Special Training Programme Land Development Policy Planning | திரு. எஸ்.டீ.ஏ.பி. பொரலஸ்ஸ | மேலதிக செயலாளர் (காணி) | கொரியா | 2014.09.23 - 2014.10.13 |
| United Nation Global Geospatial Information Management Programme in China | திரு. எஸ்.டீ.ஏ.பி. பொரலஸ்ஸ | மேலதிக செயலாளர் (காணி) | சீனா | 2014.10.22 - 2014.10.24 |
| Second Regional Workshop on Strengthning Country Safeguard System | திரு. எல்.பி.எஸ்.பி. தயாரத்ன | மேலதிக செயலாளர் (நிலச்சக்தி) | பிலிப்பைன்ஸ் | 2014.10.06 - 2014.10.10 |
| Semina on Counstruction Maintenance of Web- base Geographic Information Service Platform For Developing Countries | செல்வி ஜீ. கஜானி | உதவிச் செயலாளர் (காணிக் கொள்கை) | சீனா | 2014.10.14 - 2014.10.27 |

# 4. நிதி முகாமைத்துவம்

## 4.1 செலவு மதிப்பீடு

| | முந்திய வருடம் (2013) | | | | நடப்பு வருடம் (2014) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நிதி ஒதுக்கீடு (ரூ.) | செலவு (ரூ.) | சேமிப்பு (ரூ.) | செலவு நூற்று வீதம் (%) | நிதி ஒதுக்கீடு (ரூ.) | செலவு (ரூ.) | சேமிப்பு (ரூ.) | செலவு நூற்று வீதம் (%) |
| **செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | | | |
| 1. அமைச்சர் அலுவலகம் | | | | | | | | |
| தனிநபர் வேதனங்கள் | 16,228,690 | 16,121,696 | 106,994 | 99% | 9,800,000 | 9,507,966 | 292,034 | 97% |
| ஏனைய மீண்டெழும் | 21,120,420 | 20,825,036 | 295,384 | 99% | 32,676,465 | 2,323,754 | 30,352,711 | 7% |
| மூலதனம் | | | | | | | | |
| 2001 | 2,119,540 | 2,103,540 | 16,000 | 99% | 500,000 | 245,040 | 254,960 | 49% |
| 2002 | 200,000 | - | 200,000 | 0 | 200,000 | 23,150 | 176,850 | 12% |
| 2003 | 3,000,000 | 2,819,538 | 180,462 | 94% | 3,500,000 | 3,496,871 | 3,129 | 100% |
| 2101 | - | - | - | - | 12,500,000 | 10,751,378 | 1,748,622 | 86% |
| 2102 | 2,830,000 | 2,826,984 | 3,016 | 100% | 1,000,000 | 944,019 | 55,981 | 94% |
| 2104 | - | - | - | - | 1,000,000 | 982,873 | 17,127 | 98% |
| 2. நிருவாக மற்றும் தாபனச் சேவைகள் | | | | | | | | |
| தனிநபர் வேதனங்கள் | 97,058,251 | 97,036,984 | 21,267 | 100% | 100,200,000 | 100,059,872 | 140,128 | 100% |
| ஏனைய மீண்டெழும் | 18,024,639 | 1,780,093 | 223,708 | 100% | 93,968,539 | 93,637,833 | 330,706 | 100% |
| மூலதனம் | | | | | | | | |
| 2001 | 2,000,000 | 1,014,166 | 985,834 | 51% | 1,000,000 | 693,273 | 306,727 | 69% |
| 2002 | 300,000 | 103,174 | 196,826 | 34% | 300,000 | 72,300 | 227,700 | 24% |
| 2003 | 4,000,000 | 2,131,160 | 1,868,840 | 53% | 4,900,000 | 4,856,090 | 43,910 | 99% |
| 2101 | - | - | - | - | - | - | - | - |
| 2102 | 1,800,000 | 1,643,053 | 156,947 | 91% | 5,100,000 | 5,060,318 | 39,681 | 99% |
| 2401 | 1,500,000 | 1,486,334 | 13,666 | 99% | 1,500,000 | 1,461,950 | 38,050 | 97% |
| **அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | | | |
| 3. காணி அபிவிருத்தியும் காணி எடுத்துக் கொள்ளலும் | | | | | | | | |
| 153-2-3-4-2105 | 800,000,000 | 670,494,577 | 1,29,505,423 | 84% | 446,000,000 | 445,211,752 | 788,248 | 100% |
| நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டம் | | | | | | | | |
| 153-2-3-5-2105 | 1,300,000,000 | 1,252,463,589 | 47,536,411 | 96% | 1,646,000,000 | 1,645,637,772 | 362,228 | 100% |
| அரச பணிகளுக்காக காணி எடுத்துக் கொள்ளல் | | | | | | | | |
| 153-2-3-7-2502 | - | - | - | - | 300,000,000 | 255,403,890 | 44,596,110 | 85% |
| கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்தல் - LLRC | | | | | | | | |
| 153-2-3-8-2502 | - | - | - | - | 20,000,000 | - | 20,000,000 | 0% |
| eLand Hub | | | | | | | | |

### 4.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பி கணக்கு

| வரையறை | முந்திய வருடம் (2013) | | நடப்பு வருடம் (2014) | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு ரூ. | உண்மையான ரூ. | மதிப்பீடு ரூ. | உண்மையான ரூ. |
| செலவின் உச்ச எல்லை | 13,000,000 | 8,642,601.29 | 13,000,000 | 11,629,201.05 |
| ஆகக் குறைந்த பற்று எல்லை | 4,500,000 | 9,426,431.66 | 4,200,000 | 8,049,135.93 |
| வைப்பு உச்ச மீதி எல்லை | 50,000,000 | 24,156,452.88 | 44,000,000 | 27,736,518.00 |

### 4.3 வருமானக் கணக்கு

| | முந்திய வருடம் (2012) | நடப்பு வருடம் (2013) |
|---|---|---|
| மதிப்பீடு | இல்லை | இல்லை |
| வருட வருமானம் | இல்லை | இல்லை |
| வித்தியாசம் (+ / -) | இல்லை | இல்லை |

### 4.4 பௌதீக வள முகாமைத்துவம்

#### 4.4.1 அசையா சொத்துக்கள்

| தொடர் இல. | சொத்து வகை | வருட ஆரம்பத்தில் நிலை | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | வருட இறுதியில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எடுத்துக் கொள்ளல் | கொள்வனவு | ஏல விற்பனை | அகற்றுதல் | |
| 1. | காணி (ஏக்கர்) | - | - | - | - | - | - |
| 2. | கட்டிடங்கள் | * | - | - | - | - | * |
| 3. | நிர்மாணங்கள் | - | - | - | - | - | - |

* **2012** தொடக்கம், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் அமைக்கப்பட்ட “மிஹிகத்த மெதுர” புதிய கட்டிடத்தின் **3** ஆம் மாடியில் அமைச்சு அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்றது.

### 4.4.2 அசையும் சொத்துக்கள்

| தொடர் இல. | சொத்து வகை | வருட ஆரம்பத்தில் நிலை (2014.01.01) | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | | வருட இறுதியில் நிலை 2014.12.31 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எடுத்துக் கொள்ளல் | கொள்வனவு | ஏல விற்பனை | உரித்தாக்கல் | அகற்றுதல்/ பொறுப்பு நீக்கல் | |
| 1. | கையடக்கத் தொலைபேசி | 4 | - | 1 | 2 | - | - | 3 |
| 2. | பக்ஸ் இயந்திரம் | 18 | - | 5 | - | - | 1 | 22 |
| 3. | குளிர்சாதனப் பெட்டி | 4 | - | - | - | - | - | 4 |
| 4. | மைக்ரோவேவ் அடுப்பு | 1 | - | 1 | - | - | - | 2 |
| 5. | பிலெண்டர் | 2 | - | - | 1 | - | - | 1 |
| 6. | மின் கேத்தல் | 24 | - | 2 | 6 | - | - | 20 |
| 7. | கொடிக் கம்பம் | 5 | - | - | - | - | - | 5 |
| 8. | புத்தர் சிலை | 2 | - | - | - | - | - | 2 |
| 9. | White Board | 12 | - | 1 | - | - | - | 13 |
| 10. | White Board Stand | 3 | - | - | - | - | - | 3 |
| 11. | Water Dispenser (Hot and Cool) | 4 | - | - | - | - | - | 4 |
| 12. | UPS | 118 | - | 8 | 28 | - | - | 98 |
| 13. | கணினித் தொகுதி | 96 | - | 46 | 9 | - | - | 133 |
| 14. | குளிரூட்டி இயந்திரம் | 29 | - | - | - | - | - | 29 |
| 15. | Printers | 65 | - | - | - | - | 4 | 61 |
| 16. | Cordless Phone | 3 | - | 1 | - | - | - | 4 |
| 17. | தொலைக்காட்சிப் பெட்டி | 10 | - | 1 | - | - | - | 11 |
| 18. | மக்கள் தொடர்பாடல் முறைமை | 1 | - | - | - | - | - | 1 |
| 19. | தவுல (சங்கீத உபகரணம்) | 1 | - | - | - | - | - | 1 |
| 20. | டிரம் (பொன்கோ) | 1 | - | - | - | - | - | 1 |
| 21. | Accordion | 1 | - | - | - | - | - | 1 |
| 22. | Cusion visitor chairs | 5 | - | - | - | - | - | 5 |
| 23. | Sofa Set | 4 | - | - | - | - | - | 4 |
| 24. | Dining Table | 3 | - | - | - | - | - | 3 |
| 25. | Dining Chairs | 12 | - | - | - | - | - | 12 |
| 26. | நூலக அலுமாரி (உருக்கு) | 3 | - | - | - | - | - | 3 |
| 27. | நூலக அலுமாரி (பலகை) | 11 | - | - | - | - | - | 11 |
| 28. | நூலக வாசிப்பு மேசை | 2 | - | - | - | - | - | 2 |
| 29. | நூலக வாசிப்பு கதிரை | 12 | - | - | - | - | - | 12 |
| 30. | கண்ணாடி மேசை (வட்டம்) | 1 | - | 2 | - | - | - | 3 |
| 31. | பீரலு உருக்குக் கதிரை | 12 | - | - | - | - | - | 12 |
| 32. | உருக்கு அலுமாரி | 27 | - | - | - | - | - | 27 |
| 33. | 4 drawer cabinets | 70 | - | - | 1 | - | - | 69 |
| 34. | Executive Table MDF | 5 | - | - | - | - | - | 5 |
| 35. | கோப்பு ராக்கை | 35 | - | - | - | - | - | 35 |
| 36. | இரும்புக் கதிரை (ரெக்சின்) | 3 | - | - | - | - | - | 3 |
| 37. | எழுதுவினைஞர் மேசை | 30 | - | - | 3 | - | 1 | 26 |
| 38. | பணியாட் தொகுதி மேசை | 109 | - | - | - | - | - | 109 |

| தொடர் இல. | சொத்து வகை | வருட ஆரம்பத்தில் நிலை (2014.01.01) | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | | வருட இறுதியில் நிலை 2014.12.31 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எடுத்துக் கொள்ளல் | கொள்வனவு | ஏல விற்பனை | உரித்தாக்கல் | அகற்றுதல்/ பொறுப்பு நீக்கல் | |
| 39. | நிறைவேற்று உத்தியோகத்தர் மேசை | 21 | - | - | 1 | - | - | 20 |
| 40. | Glass pad (நிறைவேற்று உத்தியோகத்தர் மேசை) | 2 | - | - | - | - | - | 2 |
| 41. | கணினி மேசை | 64 | - | - | 2 | - | - | 62 |
| 42. | அலுவலக உதவியாளர் மேசை (சிறியது) | 8 | - | - | - | - | - | 8 |
| 43. | கணினி கதிரை | 166 | - | - | - | - | - | 166 |
| 44. | மேசை (உருக்கு) | 2 | - | - | 1 | - | - | 1 |
| 45. | மடிக் கணினி | 22 | - | 2 | 4 | - | 3 | 17 |
| 46. | பொய்லேரு | 3 | - | - | 1 | - | - | 2 |
| 47. | நிழற் பிரதி பண்ணும் இயந்திரம் | 13 | - | 5 | 1 | - | - | 17 |
| 48. | ஸ்பீக்கர் | 100 | - | - | - | - | 10 | 90 |
| 49. | பதவிநிலை கதிரை | 33 | - | 1 | - | - | 1 | 33 |
| 50. | பைபிடியுடனான கதிரை | 50 | - | - | - | - | 4 | 46 |
| 51. | தட்டச்சு இயந்திரம் | 4 | 1 | - | - | 2 | 1 | 2 |
| 52. | தட்டச்சு இயந்திரம் (இலக்ரோனிக்) | 1 | - | - | 1 | - | - | - |
| 53. | Water Dispenser (nomal) | 4 | - | - | - | - | - | 4 |
| 54. | வோட்டர் பில்டர் | 2 | - | - | 1 | - | - | 1 |
| 55. | நிலைகோல் மின்விசிறி | 9 | - | 3 | 2 | - | - | 10 |
| 56. | நூலக நூல்கள் | 1,932 | - | 141 | - | - | - | 2,073 |
| 57. | குத்துவிளக்கு | 1 | - | - | - | - | - | 1 |
| 58. | நூலக அலுமாரி (கண்ணாடி) | 7 | - | - | - | - | - | 7 |
| 59. | Dry Box | 1 | - | - | - | - | - | 1 |
| 60. | Dynamic Microphone | 1 | - | - | - | - | - | 1 |
| 61. | Microphone stand | 1 | - | - | - | - | - | 1 |
| 62. | Voice Recorder | 3 | - | - | - | - | 1 | 2 |
| 63. | Lobby chairs | 55 | - | 10 | - | - | - | 65 |
| 64. | Small Cassette recorder | 1 | - | - | - | - | - | 1 |
| 65. | Heavy duty staples machine | 5 | - | - | - | - | - | 5 |
| 66. | High back chairs | 2 | - | - | - | - | - | 2 |
| 67. | Visitor Chairs | 126 | - | 9 | - | - | - | 135 |
| 68. | Medium Back Chairs | 7 | - | - | - | - | - | 7 |
| 69. | Conference Table (Wooden) | 2 | - | - | - | - | - | 2 |
| 70. | Conference Table (Pieces) | 10 | - | - | - | - | - | 10 |
| 71. | Bunk beds | - | - | - | - | - | - | - |
| 72. | Foam Matress | 4 | - | - | - | - | - | 4 |
| 73. | பணக் காப்புப் பெட்டி | 1 | - | - | - | - | - | 1 |
| 74. | பணப் பெட்டி | 2 | - | - | - | - | - | 2 |
| 75. | Conference Chair (low back) | 55 | - | - | - | - | - | 55 |
| 76. | - do - (high back) | 48 | - | - | - | - | - | 48 |

| தொடர் இல. | சொத்து வகை | வருட ஆரம்பத்தில் நிலை (2014.01.01) | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | | வருட இறுதியில் நிலை 2014.12.31 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எடுத்துக் கொள்ளல் | கொள்வனவு | ஏல விற்பனை | உரித்தாக்கல் | அகற்றுதல்/ பொறுப்பு நீக்கல் | |
| 77. | Vedio Light & Stand - DC | 1 | - | - | - | - | - | 1 |
| 78. | - do - - AC | 1 | - | - | - | - | - | 1 |
| 79. | Platform Trolly | 1 | - | - | - | - | - | 1 |
| 80. | Sounds Systems | 2 | - | - | - | - | - | 2 |
| 81. | Multi media Projectors | 4 | - | - | 1 | - | - | 3 |
| 82. | Electrical Screen | 3 | - | - | 1 | - | - | 2 |
| 83. | Display Board | 1 | - | - | - | - | - | 1 |
| 84. | Dry Cabinet | 1 | - | - | - | - | - | 1 |
| 85. | Scanners | 5 | - | - | - | - | - | 5 |
| 86. | Non-linear Editing System | 1 | - | - | - | - | - | 1 |
| 87. | அரச இலச்சினை | 1 | - | - | - | - | - | 1 |
| 88. | புத்தர் சிலையை வைக்கும் கூடம் | 1 | - | - | - | - | - | 1 |
| 89. | Display Cabinet | 1 | - | - | - | - | - | 1 |
| 90. | கெப் வண்டி | 18 | - | 20 | - | 18 | - | 20 |
| 91. | வேன் வண்டி | 2 | - | - | - | - | - | 2 |
| 92. | மோட்டார் கார் | 3 | - | 1 | - | - | - | 4 |
| 93. | ஜீப் வண்டி | 16 | - | - | 1 | 1 | - | 14 |
| 94. | மோட்டார் சைக்கிள் | 1 | - | - | - | - | - | 1 |
| | **மொத்தம்** | **3,579** | **1** | **260** | **67** | **21** | **26** | **3,726** |

## 5. அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அமைச்சின் கீழுள்ள பிரிவுகளின் பங்களிப்பு

### 5.1 காணி அபிவிருத்திப் பிரிவு

தேசிய காணி உபயோக கொள்கைகளுக்கு ஏற்ப அரசாங்கக் காணிகளைப் பேணிப் பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல், முகாமை செய்தல், சுற்றாடல் சமநிலை பேணப்படும் விதத்தில் பல்வேறு பிரிவுகளுக்கிடையிலும் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுதல், தீவில் தனியொரு காணி நிருவாக முறைமையொன்றைப் பேணிச் செல்லல், பல்வேறு நிறுவனங்களுக்கும் அதே போன்று பொது மக்களுக்கும் அரசாங்கக் காணிகளைப் பகிர்ந்தளித்தல், பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளுக்கான உரித்தைப் பெற்றுக் கொடுத்தல் முதலான பணிகளின் போது உரிய அரச நிறுவனங்களுடனும் உத்தியோகத்தர்களுடனும் சிறந்த தொடர்பினைப் பேணிச் செல்லல் என்பன இப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

இதன் போது அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக, காணி விடயத்திற்குரிய சட்டதிட்டங்கள், கொள்கைகள் என்பவற்றை அறிமுகம் செய்தல், அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளல், காணி உரித்து நிருணயப் பணிகள், காணி உரித்து நிருணயச் சான்றிதழ்களை விநியோகித்தல், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் முதலான நிறுவனங்களுக்குத் தேவையான காணிகளை விடுவித்தல், பாரிய விவசாயக் குடியிருப்புகள், மத்திய வகுப்புக் காணிகள், எல்லைப்புற ஓர இடஞ்சார்ந்த காணிகள் என்பவற்றுக்கான அளிப்புப் பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தலும் வழிநடாத்தலும், இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ள விசேட கருத்திட்டங்களுக்காக காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளை வழிநடாத்தல், இலங்கையில் நில அளவை நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்கவாறு முன்னெடுக்கும் வகையில் நில அளவைத் திணைக்களத்தை வழிநடாத்தல், சுய விருப்புடனல்லாது இடம்பெயர்ந்தோரை மீள்குடியமர்த்தும் தேசிய கொள்கையை அமுல் செய்தல் முதலான பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காலத்தின் தேவையென அடையாளம் காணப்பட்டதன் பின் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் அடங்கிய வரைவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்பு, இதற்கு மாகாண சபைகளின் இணக்கப்பாடு கிடைக்காததின் காரணமாக, இதனை மீண்டும் வரைந்து தற்சமயம் சட்ட மா அதிபரின் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விசேட சந்தர்ப்பங்கள் தவிர அளிப்புப் பத்திரங்களிலுள்ள நிபந்தனைகளை நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று பின்னுரிமை பிள்ளைகளைச் சென்றடையும் விதம் காட்டப்பட்டுள்ள சட்டத்தின் அட்டவணை இல. III திருத்தப்பட்டு ஆண்/ பெண் இரு பாலாருக்கும் சமமான வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல், காணியின் உடைமையை அனுபவித்து வருபவருக்கு முன்னுரிமை வழங்குதல் முதலான விடயங்களை அறிமுகம் செய்வதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

**காணி அபிவிருத்திப் பிரிவு கீழ்க் காணும் பணிகளை நிறைவேற்றி வருகின்றது.**

- அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நபர்களுக்கு அரசாங்கக் காணிகளை நீண்டகாலக் குத்தகை அடிப்படையிலும், அளிப்புப் பத்திரங்கள் ஊடாகவும் பெற்றுக் கொடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நீண்டகாலக் குத்தகைப் பத்திரங்களையும், அளிப்புப் பத்திரங்களையும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்புதல்.
- நீண்டகாலக் குத்தகைப் பத்திரங்கள், அளிப்புப் பத்திரங்கள் சார்ந்ததாக காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் செயற்படுதல்.
- காணி உரித்து நிருணயத் திணைக்களத்தினால் முன்வைக்கப்படுகின்ற கிராமங்களை நிர்ணயம் செய்வதற்காக மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- பௌத்த விகாரைகளுக்கும் பிற மத வழிபாட்டுத் தளங்களுக்கும் காணிக்கை உறுதிகளையும், ஆரம்ப குத்தகைப் பத்திரங்களையும் பெற்றுக் கொடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சரினதும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வைத்தல்.
- சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு மாற்றுக் காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- அரச நிறுவனங்களுக்கு காணிகளைப் பராதீனப்படுத்தல்.
- ஓர் இலட்சம் காணித் துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டம்.
- ஓர் இலட்சம் காணித் துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடையதாக கிடைக்கப்பெறுகின்ற கடிதங்களை உரிய பிரிவுகளிடம் முன்வைத்தல்.
- காணி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை பிரதேச மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.
- தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள்.

| தொடர் இல. | | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1. | i. | மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்திற்காக காணி ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட நீண்டகால குத்தகைப் பத்திரங்களும், அளிப்புப் பத்திரங்களும் | 4,053 |
| | ii. | மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 2,219 |
| | iii. | காணி ஆணையாளர் நாயகத்திடம் வினவப்பட்ட அளிப்புப் பத்திர, நீண்டகாலக் குத்தகைப் பத்திர கோப்புகள் | 828 |
| | iv. | தற்சமயம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அளிப்புப் பத்திர, நீண்டகாலக் குத்தகைப் பத்திர கோப்புகள் | 632 |
| | v. | காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப் பெற்று, மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று, மீண்டும் காணி ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்ட அளிப்புப் பத்திர, நீண்டகாலக் குத்தகைப் பத்திர கோப்புகள் | 1,487 |
| 2. | i. | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட குத்தகைப் பத்திரங்களையும் அளிப்புப் பத்திரங்களையும் பெற்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் உருவநேர்ப்படியான கையொப்பத்திற்காக **(Facsimiled signature)** அனுப்பப்பட்ட எண்ணிக்கை (விசேட அளிப்புப் பத்திரங்கள், பூஜாபூமி அளிப்புப் பத்திரங்கள், சுனாமி அளிப்புப் பத்திரங்கள், ரணவிரு அளிப்புப் பத்திரங்கள்) | 3,350 |
| | ii. | அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் உருவநேர்ப்படியான கையொப்பத்திற்காக **(Facsimiled signature)** ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்ட குத்தகைப் பத்திரங்களினதும், அளிப்புப் பத்திரங்களினதும் எண்ணிக்கை | 2,887 |
| | iii. | காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து வினவப்பட்ட எண்ணிக்கை | 345 |
| | iv. | தற்சமயம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அளிப்புப் பத்திரங்களும், நீண்டகாலக் குத்தகைப் பத்திரங்களும் | 118 |
| 3. | i. | காணி உரித்து நிருணயத் திணைக்களத்தினால் மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 03 |
| | ii. | மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 03 |
| 4. | i. | பல்வேறு அரச நிறுவனங்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும், முப்படைகளுக்கும் காணிகளைப் பராதீனப்படுத்துவதற்காக காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற கோப்புகள் | 222 |
| 5. | i. | பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை | 1,825 |
| | ii. | செயற்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | 1,658 |
| | iii. | செயற்பட எஞ்சியுள்ள கடிதங்களின் எண்ணிக்கை | 167 |
| 6. | i. | 2014 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஸ்தல விசாரணைகளின் எண்ணிக்கை | 31 |

### 5.2 காணிக் கொள்கைப் பிரிவு

அரசாங்கக் காணிகளை உச்ச மட்டத்தில் பயன்படுத்தும் நோக்குடன் தேசிய காணிக் கொள்கைகளுக்கு ஏற்ப காலத்தின் தேவைக்குப் பொருத்தமான விதத்தில் காணி விடயம் தொடர்பான சட்டங்களில் திருத்தங்களைச் செய்தல், காணிப் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல், காணிகளை வினைத்திறன் மிக்கவாறும், உற்பத்தி விளைவுப் பெருக்கமுடையவாறும் ஈடுபடுத்திக் கொள்வதினூடாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் முதலானவை காணிக் கொள்கைப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

அரசாங்கத்தின் காணிக் கொள்கை ஊடாக, மக்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக மிகப் பரந்து பட்ட விதத்தில் மக்களின் கருத்துகளைக் கேட்டறிந்து விஞ்ஞான ரீதியில் விடயங்களை ஆராய வேண்டிய தேவை எழுந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. 1985 இல் 3 வது காணி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சிபாரிசுகளின் பின்னர் அரசாங்கக் காணிகளின் நிருவாகம் தொடர்பில் பேசப்பட்டில்லையாதலால், 4 வது காணி ஆணைக்குழுவை நிறுவுவதற்காகன நடவடிக்கைகள் தற்சமயம் எடுக்கப்பட்டு வருகின்றன. கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவினால் 2014 ஆம் வருடத்தில் அமுல் செய்வதற்காக 21 சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், இது மிக முக்கியமான நிகழ்ச்சித் திட்டமாக அமுல் செய்யப்படுகின்றது. அதே போன்று காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டம், காணிக் கொடை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், காணி எடுத்துக் கொள்ளல் சட்டம் ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இலங்கை விவசாய மக்களுக்கும், அதே போன்று மத்திய வகுப்பு மற்றும் கிராம விஸ்தரிப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அரசாங்கக் காணிகள் தொடர்பாக உள்ள நிபந்தனைகளில் திருத்தங்களைச் செய்வதன் மூலம் தடையின்றி செயற்படுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

**காணி கொள்கைப் பிரிவு கீழ்க் காணும் பணிகளை நிறைவேற்றி வருகின்றது.**

- தேசிய காணிக் கொள்கையை அமுல் செய்தலும், காலத்திற்கு ஏற்றவாறு காணி விடயம் சார்ந்த சட்ட திட்டங்களில் திருத்தங்களைச் செய்தலும்.
- பல்வேறு காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் தீர்வினை நாடி அமைச்சிற்கு வருகை தரும் மக்களுக்கு, தேவையான பணிப்புரைகள் அடங்கிய கடிதங்களைத் தயாரித்து உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும், அவை தொடர்பான முன்னேற்றத்தைத் தேடிப் பார்த்தலும்.
- ஜனாதிபதி செயலகத்திலிருந்து/ அமைச்சுகளிலிருந்து/ மாகாண சபைகளிடமிருந்து/ பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெறும் காணிக் கோரிக்கைகள் மற்றும் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பல்வேறு காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் கோரப்படுகின்ற விளக்கங்களுக்காக தேவையான ஆலோசனைகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
- மாண்புமிகு அமைச்சரிடம் முன்வைக்கபடுகின்ற காணிப் பிணக்குகள், மேன்முறையீடுகள் தொடர்பாக நுண்ணாய்வுகளை/ விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அரசாங்கக் காணிகளை வினைத்திறன் மிக்கவாறு முகாமை செய்வது தொடர்பில் மாவட்ட மட்டத்தில் காணி விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி, அதன் போது எழுகின்ற பிரச்சினைகளுக்காக ஆலோசனை வழங்குதலும், தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- மாவட்ட மட்ட கலந்துரையாடல்களின் போதும், பொது மக்கள் முறைப்பாடுகளின் போதும் வெளிக் கொணரப்படுகின்ற அத்துமீறிய காணி கைப்பற்றுதல்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளுக்கு இறங்குதல்.

### 5.3 காணி எடுத்துக் கொள்ளல் பிரிவு

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளுக்காக அரசாங்கக் காணிகள் இல்லாத போது, அதற்காக தனியார் காணிகளை எடுத்துக் கொள்வதற்காக 1954, 1955, 1961, 1964 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் காணி எடுத்தற் பணிகள் முன்னெடுக்கப்படுவது இப் பிரிவினால் ஆகும். மேலும், அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான தனியார் காணிகளை அரசுக்கு எடுத்துக் கொள்வதற்காக காணி எடுத்துக் கொள்ளல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதும், அமைச்சுகளுக்கும், திணைக்களங்களுக்கும் எடுத்துக் கொள்ளப்பட்ட காணிகளுக்காக நட்டஈடு செலுத்துதல், காணி எடுத்தற் பணிகளை முறையாக அமுல் செய்யும் வகையில் காணி எடுத்தல் உத்தியோகத்தர்களை வழிநடாத்துவதும் இப் பிரிவின் பணிகளாகும்.

தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்வதற்காக காணிகளை எடுத்துக் கொள்ள நேரிடுவதுடன், இதற்காக பெருமளவிலான காணி எடுத்தற் பிரேரணைகள் தற்சமயம் காணி அமைச்சிற்குக் கிடைத்துள்ளது. அவற்றுள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க் காணும் அபிவிருத்தித் திட்டங்கள் சார்பில் முன்னுரிமை வழங்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், தனியார் காணிகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளும் போது சுய விருப்புடனல்லாது இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்தும் தேசிய கொள்கைக்கு ஏற்ப, குறித்த நிறுவனங்கள் செயற்படுகின்றனவா என்பதும் காணி எடுத்தற் பிரிவினால் கண்காணிக்கப்படுகின்றது.

1. தென்னிலங்கை அதிவேக வீதிக் கருத்திட்டம் (மாத்தறை - ஹம்பாந்தோட்டை நீடிப்பு).
2. வடபகுதி அதிவேக வீதிக் கருத்திட்டம்.
3. தேசிய நெடுஞ்சாலைகள் துறை கருத்திட்டத்தின் கீழ் தீவு முழுவதும் வீதிகளை அகலமாக்கல்.
4. பேராதனை - பதுளை - செங்கலடி வீதி அபிவிருத்தித் திட்டம்.
5. மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரத வீதி நிர்மாணத்திட்டம்.
6. மொறகஹகந்த/ களுகங்கை அபிவிருத்தித் திட்டம்.
7. உமா ஓயா கருத்திட்டம்.
8. நீர் வழங்கல் கருத்திட்டங்களை அமுல் செய்தல்.
9. வேரஸ்கங்க அபிவிருத்தித் திட்டத்திற்கான காணி எடுத்துக் கொள்ளல்.
10. நகர அபிவிருத்தித் திட்டங்கள்.
11. கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்வதற்கான பிரேரணைகள்.
12. கிராம விஸ்தரிப்புக் கருத்திட்டங்கள்.
13. அமைச்சுகளின் தேவைகளுக்காக - பாடசாலை, வைத்தியசாலை, விளையாட்டு மைதானங்கள் முதலானவை.

2014 ஆம் வருடத்திற்காக பொதுவான காணி எடுத்துக் கொள்ளல்கள் சார்பில் நட்டஈடு மற்றும் வட்டி செலுத்துவதற்கு திறைசேரியினால் ரூ. 1,750.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு மற்றும் வட்டி செலுத்துவதற்காக பிரதேச செயலாளர்களுக்கு வழங்கும் பொருட்டு ரூ. 1,743.33 மில்லியன் நிதி ஒதுக்கீடு மாவட்டச் செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டது. அதற்கமைய, பிரதேச செயலாளர்களினால் ரூ. 1,645.59 மில்லியன் நிதி காணி உரிமையாளர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

| விடயம் | 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை பிறப்பித்தல் | | 4 ஆம் பிரிவின் கீழான கட்டளை பிறப்பித்தல் | | 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை பிறப்பித்தல் | | 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை பிறப்பித்தல் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கோப்புகள் | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கோப்புகள் | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கோப்புகள் | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கோப்புகள் |
| துறைமுகங்கள்,நெடுஞ்சாலைகள் | 673.0178 | 147 | | | 554.5467 | 156 | 569.1537 | 141 |
| கல்வி | 3.5850 | 4 | 3.722 | 2 | 56.1110 | 10 | 4.0680 | 3 |
| காணி இல்லாத மக்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளித்தல் | 238.7643 | 56 | 80.699 | 21 | 49.6637 | 14 | 142.9982 | 37 |
| பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் | 1272.2833 | 25 | 2.202 | 2 | 183.4389 | 16 | 184.5499 | 16 |
| குடிநீர் வசதிகளை வழங்கல் | 2.3020 | 29 | 1.790 | 6 | 4.0360 | 23 | 1.8270 | 11 |
| பிற பகிரங்க தேவைகளுக்காக | 1221.3168 | 166 | 29.799 | 54 | 1789.1197 | 183 | 465.7094 | 141 |
| **மொத்தம்** | **3411.2692** | **427** | **118.212** | **85** | **2636.9160** | **402** | **1368.3062** | **349** |

- 2014.12.31 வரை ஒட்டுமொத்தக் காணி எடுத்துக் கொள்ளல்களுக்காகவும் காணி எடுத்தற் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை பிறப்பித்தல் - 3,411.26 ஹெக்டயார்.

- 2014.12.31 வரை ஒட்டுமொத்தக் காணி எடுத்துக் கொள்ளல்களுக்காகவும் நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்குதல் - ரூ. 1,743.33 மில்லியன்.

- 2014.12.31 வரை ஒட்டுமொத்தக் காணி எடுத்துக் கொள்ளல்களுக்காகவும் நட்டஈடு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காகச் செய்யப்பட்ட செலவு - ரூ. 1,645.59 மில்லியன்.

### 2015 ஆம் வருடத்திற்கான உத்தேச திட்டம்

| செயற்பாடுகள் | **தேசிய இலக்கு - 2015** |
|---|---|
| நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்குதல் | ரூ. 2,500.0 மில்லியன் |
| வேலைகள் முடிக்கப்படாத பழைய கோப்புகள் | 1,690 கோப்புகள் |
| காணி எடுத்துக் கொள்ளல் தொழிற்பாட்டை பிரதேச செயலகங்களுடன் வலையமயமாக்கல் | 25 பிரதேச செயலகங்கள் |

## காணி எடுத்துக் கொள்ளல் முன்னேற்றம் LLRC - 2014.12.31 ஆம் திகதிக்கு

| மாவட்டம் | காணி எடுத்துக் கொள்ளல்களின் மொத்த எண்ணிக்கை | | இடைநிறுத்தப்பட்ட காணி எடுத்துக் கொள்ளல்களின் எண்ணிக்கை | | அமுலிலுள்ள காணி எடுத்துக் கொள்ளல்களின் எண்ணிக்கை | | 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை பிறப்பித்தல் | | 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை பிறப்பித்தல் | | 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை பிறப்பித்தல் | | 2014 ஆம் வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு (ரூ.மி.) | 2014 ஆம் வருடத்தில் நிதி ஒதுக்கீடுகளை விடுவித்தல் (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | காணி எடுத்தற் பிரேரணைகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | காணி எடுத்தற் பிரேரணைகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | காணி எடுத்தற் பிரேரணைகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | காணி எடுத்தற் பிரேரணைகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | காணி எடுத்தற் பிரேரணைகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | காணி எடுத்தற் பிரேரணைகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | | |
| யாழ்ப்பாணம் | 130 | 3,225.45 | 23 | 28.37 | 107 | 3,197.08 | 130 | 3,225.45 | 14 | 2,607.18 | 14 | 2,607.18 | 150 | 2.084 |
| மன்னார் | 24 | 60.84 | 0 | - | 24 | 60.84 | 24 | 60.84 | 15 | 37.65 | 15 | 37.65 | 45 | 2 |
| கிளிநொச்சி | 55 | 160.25 | 16 | 18.47 | 39 | 141.78 | 55 | 160.25 | 20 | 60.12 | 20 | 60.12 | 65 | 2 |
| முல்லைத்தீவு | 33 | 581.41 | 10 | 30.21 | 23 | 551.19 | 33 | 581.41 | 8 | 21.82 | 8 | 21.82 | 50 | 2 |
| வவுனியா | 4 | 22.87 | 0 | - | 4 | 22.87 | 4 | 22.87 | 1 | 8.33 | 1 | 8.33 | 15 | 2 |
| திருகோணமலை | 32 | 747.84 | 10 | 5.80 | 22 | 742.05 | 32 | 747.84 | 4 | 704.30 | 4 | 704.30 | 60 | 2 |
| மட்டக்களப்பு | 6 | 16.12 | 0 | - | 6 | 16.12 | 6 | 16.12 | 1 | 0.08 | 1 | 0.08 | 15 | 2 |
| அம்பாறை | 3 | 2.11 | 0 | - | 3 | 2.11 | 3 | 2.11 | 0 | - | 0 | - | - | - |
| **மொத்தம்** | **287** | **4,818.88** | **59** | **82.85** | **228** | **4,734.03** | **287** | **4,816.88** | **63** | **3,439.48** | **63** | **3,439.48** | **400** | **14.084** |

## 5.4 நிலச்சக்திப் பிரிவு

இலங்கையில் காணியின் உரிமையை உறுதி செய்து, எதிர்கால சந்ததியினருக்காக இக் காணி வளத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் அமுல் செய்யப்படுகின்ற நிலச்சக்தி தேசிய நிகழ்ச்சித் திட்டமானது, தேசிய பொருளாதார அபிவிருத்தியுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றதும், அதற்குப் பக்கபலமாக செயற்படுகின்றதுமான நிகழ்ச்சித் திட்டமாக விளங்குகின்றது. காணியின் சிக்கலற்ற உரித்தை உறுதி செய்து, காணி உரிமையாளரின் உரித்தைப் பதிவு செய்வதினூடாக மக்களுக்கு தலைநிமிர்ந்து வாழ்வதற்கான சூழலை அமைத்துக் கொடுப்பதன் மூலமும், தமது காணிகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும், அக் காணிகளை எதிர்கால முதலீடுகளுக்கு ஈடுபடுத்தி நபர்களின் அபிவிருத்திக்கு கூடிய வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும், இதன் மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கும், இவ் உரித்து நிருணய தேசிய வேலைத் திட்டமான நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழி வகுக்கப்படுகின்றது.

### 5.4.1 நோக்கு

காணிப் பிணக்குகள் அற்ற சுபீட்சம் நிறைந்த சமூகம்.

### 5.4.2 செயற்பணி

உறுதிமிக்க காணி உரித்தினூடாக இலங்கையின் அபிவிருத்திக்கு உச்ச பங்களிப்பைச் செய்தல்.

### 5.4.3 குறிக்கோள்கள்

1. இலங்கையில் காணிப் பதிவு முறையை நம்பகத் தன்மையுடையதாகவும், வினைத்திறன் மிக்கதுமான இலகுவான முறைமையொன்றாக மாற்றியமைத்தல்.

2. காணிப் பிரச்சினைகளையும் பிணக்குகளையும் தீர்த்து வைப்பதினூடாக காணியின் உரிமையை உறுதி செய்தல்.

3. சிறந்த காணி முகாமைத்துவத்தை முன்னெடுக்கும் வகையில் கணினிமயப்படுத்தப்பட்ட காணித் தகவல் முறைமையொன்றை நிறுவுதல்

### 5.4.4 பணிகள்

நாட்டு மக்களின் காணி உரித்தை உறுதி செய்யும் மத்திய நிலையமாகச் செயற்படுவதே நிலச்சக்திப் பிரிவின் பிரதான பணியாகும். இதற்காக தேவையான கொள்கைகளை வகுத்தல், குறித்த திணைக்களங்களுடனும், நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்பைப் பேணுதல், முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொள்ளல் முதலானவை இப் பிரிவின் பிற பணிகளாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நில அளவைத் திணைக்களம், காணி உரித்து நிருணயத் திணைக்களம், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் பங்களிப்புச் செய்கின்றன. நில அளவைத் திணைக்களத்தினால் எல்லைகள் இடப்பட்டு கடத்திரள் வரைபடங்களைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. காணி உரித்து நிருணயத் திணைக்களத்தினூடாக காணியின் உரித்து நுண்ணாய்வு செய்யப்பட்டு காணியின் உரித்தை உறுதி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் சிக்கல்கள் காணப்படுகின்ற அரசாங்கக் காணிகள் தொடர்பில் செயற்பட்டு அப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதினூடாக இந் நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தனது பங்களிப்பை வழங்குகின்றது. இங்கு பதிவாளர் நாயகத் திணைக்களம் காணியைப் பதிவு செய்து உரித்துச் சான்றிதழ்களை விநியோகிக்கும்.

#### 5.4.5 நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் விரிவாக்கம்

தற்சமயம் நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டமானது, பலாங்கொடை, வெலிகெபொல, குருவிட்ட, இரத்தினபுரி, உடப்பலாத்த, உடுநுவர, கங்கவட்டக் கோறளை, ஹாரிஸ்பத்துவை, கொத்மலை, தம்புள்ளை, திவுலப்பிட்டி, மீரிகமை, மினுவாங்கொடை, அத்தனகலை, ஜா-எல, வத்தளை, கம்பஹா, கட்டானை, தொம்பே, மகறை, களனி, தம்புத்தேகமை, தலாவை, ராஜாங்கனய, கிழக்கு நுவரகம்பலாத்த, ஹோமாகமை, மொறட்டுவை, இரத்மலானை, கெஸ்பேவை, தெஹிவளை, லுணுகம்வெஹெர, திஸ்ஸமகாராம, ரிதீகமை, பன்னலை, குருணாகல், மல்லவப்பிட்டி, சியம்பலாண்டுவை, ரிதீமாலியத்த, மகியாங்கனை, மெதிரிகிரிய, ஹிங்குராக்கொடை, பாணந்துறை, களுத்துறை, வெலிகம, மாத்தறை, காலி, வென்னப்புவை, நல்லூர், கலேவளை, பல்லேப்பொல, ஹம்பாந்தோட்டை, ஹிக்கடுவை, ஹொரணை, நிவித்திகலை, புத்தளம், வாரியப்பொலை, திஹகொடை, கலிகமுவை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல் செய்யப்படுகின்றது.

அதேபோன்று 2015 ஆம் வருடத்தில் பியகமை, சூரியவெவ, குளியாப்பிட்டி, மகாவலி **'C'** வலயம், மகாவலி **'B'** வலயம், அம்பாறை, கரைச்சி, மத்துகமை, வறக்காப்பொலை, முந்தல், வவுனியா தெற்கு, நுவரெளியா, திம்பிரிகஸ்யாக ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 2015 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்படவுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- **செயற்பாடுகளை மீள்நிர்மாணம் செய்யும் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய அடுத்த கட்டப் பணிகள் (Government Process Re-Engineering – GPR)**

**1. காணித் தகவல் நிலையத்தை நிறுவுதல் (E-Land hub)**

தற்சமயம் அமுல் செய்யப்படுகின்ற நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மக்களுக்கும், அதே போன்று தேசிய அபிவிருத்திக்கும் பெற்றுக் கொள்ளக் கூடிய பயன்களை மேலும் விருத்தி செய்யும் நோக்குடனும், ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்தையும் வினைத்திறனாக்கும் நோக்குடனும் காணித் தகவல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கமைய, நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்ற எல்லாத் திணைக்களங்களும் உட்படுமாறு கணினிமயப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்றினூடாக எல்லாச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தை 03 கட்டங்களில் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதலாவது கட்டத்தை 2015 ஆம் வருடத்தில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டப் பணிகள் 2015 ஆம் வருட நடுப்பகுதியில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற உரித்துச் சான்றிதழ்களைத் துரிதமாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், ஊழல் மோசடிகள், பிழைகள், குறைபாடுகள் என்பவற்றை இயன்றவரை குறைப்பதற்கும், இதற்காக சட்டத்தரணிகள், வங்கியாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய எல்லாத் திணைக்களங்களினதும் செயற்பாடுகளை மீள்நிர்மாணம் செய்து கணினிமயப்படுத்தி, இத் திணைக்களங்கள் அனைத்தையும் வலயமயப்படுத்தி நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கமைய காணித் தகவல் நிலையத்தை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 2. காணி ஆவணங்களை வருடி கணினி மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் (eLand Registry)

காணித் தகவல் நிலையத்திற்குச் சமாந்திரமாக பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் காணி ஆவணங்களை (ஏடுகளை) வருடி கணினிமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய காணிப் பதிவு அலுவலகங்களில் உள்ள காணிப் பதிவேடுகளை வருடி இலத்திரனியல் வடிவத்திற்கமைவாகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் புதிய கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் போது கணினிமயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக அக் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படவுள்ளது.

நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்யும் போது, ஆரம்ப மற்றும் விரிவான நுண்ணாய்வொன்று இடம்பெறும் சந்தர்ப்பங்களில் காணி ஏடுகளைக் கையாள்வது பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்காக மிகவும் சிரமப்பட வேண்டியிருப்பதுடன், இதனை நேரமும், உழைப்பும் செலவாகும் தொழிற்பாடாகக் குறிப்பிடலாம். **eLand Registry** நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுவதினூடாக, நுண்ணாய்வுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு தமது அலுவலகத்தில் இருந்து கொண்டு அல்லது காணிப் பதிவு அலுவலகத்திலுள்ள கணினி மூலம் கோப்புகளைப் பரீட்சித்து நுண்ணாய்வுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதற்கமைய, **2015** ஆம் வருடத்தில் **16** காணிப் பதிவு அலுவலகங்களில் இந் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்வதற்காக, நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு காணி, காணி அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்கமைய, ஹோமாகமை, அவிசாவளை, நீர்கொழும்பு, களுத்துறை, பாணந்துறை, மத்துகமை, ஹொரணை, கண்டி, கம்பளை, மாத்தளை, நுவரெளியா, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டி, கேகாளை, குருணாகல், குளியாப்பிட்டி ஆகிய காணிப் பதிவு அலுவலகங்களில் இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

**பிற விசேட தகவல்கள்**

- **தேசிய இடஞ்சார் தரவுத் தளத்தை நிர்மாணித்தல் (National Spatial Data Infrastructure - NSDI)**

தேசிய இடஞ்சார்ந்த தரவுத் தளம் **(National Spatial Data Infrastructure - NSDI)** என்பது அரச, தனியார், உள்ளூராட்சி என்றவாறு பல நிறுவனங்களின் பங்களிப்புடன் இடஞ்சார்ந்த தரவுகளைப் பரிமாறிக் கொள்வதற்கான முறையொன்றெனக் குறிப்பிட முடியும். இதற்கமைய காணி, காணி அபிவிருத்தி அமைச்சு, மேலும் **27** நிறுவனங்களின் பங்களிப்புடன் தேசிய இடஞ்சார்ந்த தரவுத் தளமொன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை தற்சமயம் ஆரம்பித்துள்ளது. இவ் இடஞ்சார்நத தரவுத் தளத்தை நிறுவும் போது, இதன் பிரதான நடவடிக்கை நிலையமாக காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் நிலச்சக்திப் பிரிவு தற்சமயம் இயங்கி வருகின்றது.

இடஞ்சார்ந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்ட சேவைகளான, தேசிய திட்டமிடல், காணி உபயோகத் திட்டமிடல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, நிலைபேறான சுற்றாடலும், அனர்த்த முகாமைத்துவமும் ஆகிய விடயங்களை வினைத்திறன் மிக்கவாறும், விளைவுப் பெருக்கமுடைய விதத்திலும் நிறைவேற்றுவதற்கு இதனூடாக வழி வகுக்கப்படுவதுடன், இவ் வேலைத் திட்டம் இலங்கை மக்களுக்கு மிக முக்கியம் பெறுகின்றது. இதன் மிக முக்கிய நடவடிக்கையாக, தேசிய தேசப்பட வாயிலொன்றை **(National Map Portal)** நிர்மாணிப்பதற்கான திறன்முறை நடவடிக்கை தற்சமயம் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிர்மாணிக்கப்படுகின்ற தேசிய தேசப்பட வாயிலூடாக, இலங்கையில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான பெறுமதி மிக்க இடஞ்சார்ந்த தரவுகளை அபிவிருத்தித் தொழிற்பாட்டிற்கு ஈடுபடுத்திக் கொள்ளும் பொதுவான பொறிமுறை உருவாக்கம் பெறுவதுடன், இதனூடாக மக்களுக்கு மிகச் சிறந்த சேவையொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் சந்தர்ப்பம் கிட்டுகின்றது.

இத் திறன்முறை தொழிற்பாட்டினூடாக அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பை விருத்தி செய்து, தரவுகளைப் பரிமாறிக் கொள்ளும் சூழலொன்றையும், திட்டமொன்றையும் ஆரம்பிக்க முடியும். தேசிய தேசப்பட வாயிலை **(National Map Portal)** நிறுவுவதன் மூலம் இடஞ்சார்ந்த தரவுகள் மீது, அரச, தனியார், ஆய்வு முதலான எல்லா நிறுவனங்களுக்கும் உடனடியாகப் பிரவேசிக்க முடியும்.

### 5.4.6 2014.01.01 தொடக்கம் 2014.11.30 வரை நிலச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம்

| தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபடங்களின் எண்ணிக்கை - நில அளவைத் திணைக்களம் | சிபாரிசு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவை - காணி உரித்து நிருணயத் திணைக்களம் | தீர்மானம் பகிரங்கப்படுத்தப்பட்ட எண்ணிக்கை - காணி உரித்து நிருணயத் திணைக்களம் | பதிவு செய்யப்பட்ட உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை - பதிவாளர் நாயகத் திணைக்களம் |
|---|---|---|---|
| 94,052 | 48,378 | 58,690 | 42,196 |

### 5.4.7 அசையும் சொத்துக்கள் - 2014

| தொடர் இல. | சொத்து வகை | வருட ஆரம்பத்தில் நிலை | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | வருட இறுதியில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எடுத்துக் கொள்ளல் | கொள்வனவு | ஏல விற்பனை | அகற்றுதல் | |
| 1 | பார வாகனம் | - | - | - | - | - | - |
| 2 | கெப் வண்டி | - | - | - | - | - | - |
| 3 | மோட்டார் கார் | - | - | - | - | - | - |
| 4 | வான் | - | - | - | - | - | - |
| 5 | முச்சக்கர வண்டி | - | - | - | - | - | - |
| 6 | சைக்கிள் | - | - | - | - | - | - |
| 7 | பிரதி பண்ணும் இயந்திரம் | 01 | - | - | - | - | 01 |
| 8 | நிழற் பிரதி பண்ணும் இயந்திரம் | 01 | - | - | - | - | 01 |
| 9 | கணினிகள் | 10 | - | 03 | - | 02 | 11 |
| 10 | கணினி அச்சு இயந்திரம் | 04 | - | - | - | - | 04 |
| 11 | லப்ரொப் கணினி | 04 | - | - | - | - | 04 |
| 12 | பக்ஸ் இயந்திரம் | 01 | - | 01 | - | 01 | 01 |
| 13 | தட்டச்சு இயந்திரம் | - | - | - | - | - | - |
| 14 | மின் இயக்க தட்டச்சு இயந்திரம் | - | - | - | - | - | - |
| 15 | பணக்காப்புப் பெட்டி | - | - | - | - | - | - |
| 16 | கமரா | 01 | - | - | - | - | 01 |
| 17 | வீடியோ கமரா | 01 | - | - | 01 | - | - |
| 18 | தொலைக்காட்சிப் பெட்டி | 01 | - | - | - | - | 01 |
| 19 | வானொலிப் பெட்டி | 01 | - | - | - | 01 | - |
| 20 | குளிர்சாதனப் பெட்டி | - | - | - | - | - | - |
| 21 | புரொஜெக்டர் | 02 | - | 01 | - | - | 03 |
| | **மொத்தம்** | **27** | **-** | **05** | **01** | **04** | **27** |

### 5.5 நிருவாகப் பிரிவு

**நிருவாகப் பிரிவினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.**

- காணி, காணி அபிவிருத்தி அமைச்சினதும், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களான,

1. நில அளவைத் திணைக்களம்
2. காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்
3. காணி உரித்து நிருணயத் திணைக்களம்
4. காணி உபயோக, கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் ஆகிய திணைக்களங்களினதும் அனைத்து நிருவாக மற்றும் தாபன நடவடிக்கைகள்.

- அமைச்சரவைப் பத்திரங்கள், அமைச்சரவை அவதானிப்புகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- பாராளுமன்ற வாய்மூல வினாக்களுக்கான விடை, பொது மனுக்குழு, பாராளுமன்ற ஆலோசனைக் குழு தொடர்பான நடவடிக்கைகள்.
- எல்லா உத்தியோகத்தர்களினதும் சுயவிபரக் கோவைகள் தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளலும், அக் கோப்புகளைப் பேணிச் செல்லலும்.
- உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகள், புலமைப் பரிசில்கள் தொடர்பான நடவடிக்கைகள்.
- எல்லா உத்தியோகத்தர்களினதும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல்.
- உத்தியோகத்தர்களுக்கான சுங்கத் தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்தல் தொடர்பான நடவடிக்கைகள்.
- தபால் தொடர்பான அனைத்துவித நடவடிக்கைகளையும் பேணிச் செல்லல்.

### 5.6 திட்டமிடல் பிரிவு

**திட்டமிடல் பிரிவின் பணிகளை 7 பிரதான பிரிவுகளின் கீழ் பின்வருமாறு சுருக்கமாக விளக்கலாம்.**

1. **அமைச்சின் சார்பில்**
    - வருடாந்த செயற் திட்டம்
    - மத்தியகாலத் திட்டம்
    - அமைச்சின் வருடாந்த வரவு - செலவுத் திட்ட வெளியீடு
    - செயலாற்றுகை அறிக்கை

    முதலான அறிக்கைகளைத் தயாரித்தல்.
2. இவ் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தலும், தேசிய திட்டமிடல் திணைக்களம், கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் ஆகிய திணைக்களங்களிடம் முன்வைத்தலும்.
3. மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்கு அமைய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து, நிதி, திட்டமிடல் அமைச்சின் இணையத் தளத்தில் உட்சேர்த்தல்.
4. அரச நிறுவனங்களுடன் திட்டமிடல் பணிகளை ஒருங்கிணைத்தல்.
5. **"தேசத்திற்கு மகுடம்"** தேசிய கண்காட்சிக்காக அமைச்சினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை ஏற்பாடு செய்தலும் வழிநடாத்தலும்.
6. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல்.
7. காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரைகளுக்கு அமைய பிரிவுகளினதும், நிறுவகங்களினதும் திட்டமிடல் தேவைகளின் அடிப்படையில் கருத்திட்டங்களை அமுல் செய்தல், முன்னேற்றங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக ஒத்துழைப்பு வழங்கல்.

## 5.7 சட்டப் பிரிவு

அமைச்சுடன் தொடர்புடைய வழக்குகள் தொடர்பிலான பணிகள், சட்டத் திருத்தங்களுடன் தொடர்புடைய பணிகள் மற்றும் அமைச்சின் கீழுள்ள பல்வேறு பிரிவுகளினாலும் முன்வைக்கப்படுகின்ற சட்டப் பிரச்சினைகள்/ சிக்கல்கள் தொடர்பில் அவதானிப்புகளை முன்வைத்தல் முதலானவை சட்டப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

இவற்றுடன் தொடர்புடையதாக காணி எடுத்துக் கொள்ளல், காணி அபிவிருத்தி, நிருவாகம் முதலான துறைகள் சம்பந்தப்பட்டதாக 2014 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற வழக்குகள் தொடர்பிலான விபரங்கள் வருமாறு:

| | கிடைக்கப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| காணி எடுத்துக் கொள்ளலுடன் தொடர்புடையவை | 32 | 01 |
| காணி அபிவிருத்திப் பணிகளுடன் தொடர்புடையவை | 15 | 01 |
| நிருவாக நடவடிக்கைகளுடன் தொடர்புடையவை | 07 | 01 |

## 5.8 நிதிப் பிரிவு

**நிதிப் பிரிவினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.**

- வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- காசுப் புத்தகத்தையும், செலவுப் பேரேட்டையும் பேணிச் செல்லல்.
- எல்லாவித செலவுகளையும் ஏற்பதுடன் தொடர்புடையதாக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- மாதாந்த கணக்குப் பொழிப்புகளைத் தயாரித்தலும், திறைசேரிக்கு அனுப்புதலும்.
- வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்தல்.
- கணக்காய்வு விளக்க ஏட்டைப் பேணிச் செல்லலும், அரசாங்கக் கணக்குகள் குழு தொடர்பான நடவடிக்கைகளும்.
- களஞ்சியசாலை நடவடிக்கைகளும், சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்தலும்.
- பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கைகள்.
- கொள்முதல் நடவடிக்கைகள்.
- நிலச்சக்தி மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்தல் என்பவற்றிற்காக நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்குதலும் ஒருங்கிணைத்தலும்.
- வருடாந்த கணக்குகள் சமப்படுத்தலும், வருடாந்த கணக்குகள் மீளளித்தலும்.

## 5.9 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் பூரண கண்காணிப்பின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுகின்றது.

அமைச்சும், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களும் நம்பகத் தன்மையுடன் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதை உறுதி செய்யும் வகையில் மதிப்பீடுகளை மேற்கொண்டு விருத்தி செய்வதற்கு யோசனை முன்வைப்பதற்கு இப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் வருடத்தில் 14 உள்ளகக் கணக்காய்வு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இதற்கான பின்ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், திணைக்களங்கள், நில அளவைப் பேரவை என்பவற்றின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரியவாறு நடாத்தப்பட்டுள்ளன.